Crl. Misc. 39

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF ADDITIONAL DISTRICT COURT, RAMANATHAPURAM**

| | | | | |
|---|---|---|---|---|
| Calendar | .. | .. | } | |
| Miscellaneous | .. | .. | } | |
| Preliminary Register | .. | .. | } | **S.C.** 153/2022 |
| Sessions | .. | .. | } | |
| | | | } | Prosecution – **PW**14 |
| Deposition of witness for | | | } | Defence – |
| | | | } | Court – |

| | | |
|---|---|---|
| Name | : | ஜெயமதி |
| Husband Name | : | கணபதி |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 01.02.2023.

(எதிரிகள் 1 முதல் 3 ஆஜர்.)

முதல் விசாரணை–

நான் தற்போது காரான் குரூப் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 06.03.2021ம் தேதி சக்கரக்கோட்டை குரூப் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்த போது கேணிக்கரை காவல் ஆய்வாளர் அவர்கள் செல்போன் மூலம் தொடர்பு கொண்டு இராமநாதபுரம் பாலுமீனா லாட்ஜ் அருகே வரச்சொன்னதின் பேரில் நானும், கிராம உதவியாளர் மோகன் தாஸ் என்பவரும் அங்கு சென்றோம். இவ்வழக்கில் எதிரியான முத்து முருகன் என்பவரை கைது செய்து வைத்திருந்தார்கள். அவரை என்னிடம் அறிமுகம் செய்தார். பின்னர் எதிரி தானாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தை ஆய்வாளர் எங்கள் முன்பு பதிவு செய்தார். அதில் நானும், கிராம உதவியாளர் மோகன் தாஸ் என்பவரும்

கையெழுத்து செய்தோம். ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் தன்னை அழைத்துச்சென்றால் சம்பவத்திற்கு பயன்படுத்திய சவுக்குக்கட்டையை மறைத்து வைத்திருந்த இடத்தை காண்பித்து எடுத்து தருவதாக சொன்னதின் பேரில் இராமநாதபுரம் வண்டிக்காரத்தெரு முருகன் கோவில் வடக்கே உள்ள ஊரணி குப்பைத்தொட்டி அருகே மறைத்து வைத்திருந்ததை எதிரி எடுத்து ஆஜர் செய்ததை ஆய்வாளர் அத்தாட்சி மூலம் கைப்பற்றினார். அதில் நானும், கிராம உதவியாளர் மோகன் தாஸ் என்பவரும் கையெழுத்து செய்தோம். ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.4. அத்தாட்சி அ.சா.ஆ.5. அதன் பின்பு மீண்டும் ஆய்வாளர் என்னை மதியம் 01.30 மணிக்கு செல்போன் மூலம் தொடர்பு கொண்டு அழைத்ததின்பேரில் நானும், கிராம உதவியாளர் மோகன் தாஸ் என்பவரும் சக்கரக்கோட்டை இரயில்வே கேட் பகுதிக்கு சென்றோம். அங்கே எதிரி அண்ணாமலை என்பவரை ஆய்வாளர் கைது செய்து வைத்திருந்தார். அவரை என்னிடம் அறிமுகம் செய்தார். பின்னர் எதிரி தானாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தை ஆய்வாளர் எங்கள் முன்பு பதிவு செய்தார். அதில் நானும், கிராம உதவியாளர் மோகன் தாஸ் என்பவரும் கையெழுத்து செய்தோம். ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் தன்னை அழைத்துச்சென்றால் சம்பவத்திற்கு பயன்படுத்திய TN 65 AJ 4942 என்ற எண் கொண்ட ஆட்டோ ஒன்றையும், Redmi Blue கலர் செல்போன் ஒன்றையும் மறைத்து வைத்திருந்த இடத்தை காண்பித்து எடுத்து தருவதாக சொன்னதின் பேரில் இராமநாதபுரம் இரயில்வே ஸ்டேசன் முன்பு மதியம் 03.15 மணிக்கு மறைத்து வைத்திருந்ததை எதிரி எடுத்து ஆஜர் செய்ததை ஆய்வாளர் அத்தாட்சி மூலம் கைப்பற்றினார். அதில் நானும், கிராம உதவியாளர் மோகன் தாஸ் என்பவரும் கையெழுத்து செய்தோம். ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.6. அத்தாட்சி அ.சா.ஆ.7. Redmi Blue கலர் செல்போன் சா.பொ.3. அதன் பிறகு எதிரி மற்றும் சொத்துக்களுடன் ஆய்வாளர் நிலையம் சென்றார். என் முன்பு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்த எதிரிகள் நீதிமன்றத்தில் இன்று ஆஜரான எதிரிகள் ஆவார்கள். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

மேற்சொன்ன 2, 3 எதிரிகளை எந்த தினத்தில், எந்த நேரத்தில் ஆய்வாளர்

எங்கிருந்து பிடித்திருந்தார் என்ற விவரம் தெரியாது என்றால் சரிதான். என்னை ஆய்வாளர் செல்போனில் அழைக்கும்போது நான் அலுவலகத்தில் தான் இருந்தேன். இராமநாதபுரம் பழைய பேருந்து நிலையம், இரயில்வே நிலையம், இரயில்வே கேட் ஆகியவைகள் ஒரே ஏரியாவில் தான் இருக்கிறது என்றாலும் ஒவ்வொன்றுக்கும் இடையே சுமார் 50 மீ இடைவெளி இருக்கும் என்றால் சரிதான். மேற்சொன்ன 3 இடங்களும் மிகவும் ஜன நெருக்கடியான பகுதி என்றாலும் இரண்டு பக்கமும் கடைகள், வீடுகள் அடுத்தடுத்து இருக்கிறது என்றால் சரிதான். எனது அலுவலகம் இராமநாதபுரம் குமரையா கோவில் அருகில் தான் இருக்கிறது. நானும், கிராம உதவியாளர் மோகன் தாசும் தனித்தனி வாகனத்தில் தான் சென்றோம். நான் இராமநாதபுரம் பழைய பேருந்து நிலையத்திற்கு செல்வதற்கு முன்பாகவே எதிரியுடன் ஆய்வாளர் சீருடையில் தான் நின்று கொண்டிருந்தார்கள். அந்த பேருந்து நிறுத்தத்தில் நின்றுகொண்டிருந்த பயணிகள், பக்கத்தில் இருந்த கடைக்காரர்கள் அனைவரும் பார்த்துக்கொண்டிருந்தார்கள் என்றால் சரிதான். அதேபோல இராமநாதபுரம் சக்கரக்கோட்டை இரயில்வே கேட்டில் நின்றுகொண்டிருந்த பயணிகள், பக்கத்தில் இருந்த கடைக்காரர்கள் மற்றும் இரயில்வே கேட்டில் பணிபுரிந்த பணியாளர் அனைவரும் பார்த்துக்கொண்டிருந்தார்கள் என்றால் சரிதான். ஆனால் கடை பூட்டப்பட்டிருந்தது. சவுக்குக்கட்டை என்பது சாதாரணமாக கிடைக்கக்கூடிய பொருள் என்று சொன்னால் சரிதான். மேற்படி சவுக்குக்கட்டை எடுத்துக்கொடுத்த இடம் ஊரணிக்கரை அது திறந்தவெளி என்றாலும் சவுக்குக்கட்டை அனாதையாக கிடந்தது என்றாலும் சரிதான். 1ம் எதிரி எடுத்துக்கொடுத்ததாக சொல்லக்கூடிய TN 65 AJ 4942 என்ற எண் கொண்ட ஆட்டோ எடுத்துக்கொடுத்த இடம் இரயில்வே நிலையத்தில் இருக்கக்கூடிய சைக்கிள் ஸ்டாண்டுக்கு அருகே என்று சொன்னால் சரிதான். அந்த ஆட்டோ அனாதையாகத்தான் நின்று கொண்டிருந்தது என்றால் சரிதான். அவ்வாறு நாங்கள் எடுத்துச்செல்லும்போது அந்த ஸ்டாண்டில் இருந்த நபர்கள் எல்லோரும் பார்த்துக்கொண்டு தான் இருந்தார்கள் என்றால் சரிதான். நான் கையொப்பம் இட்ட அ.சா.ஆ.4 முதல் அ.சா.ஆ.7 ஆவணங்கள் எந்த எந்த இடத்தில் கைது செய்து பொருட்களை கைப்பற்றினோமோ அந்த இடத்தில் வைத்து தான் காவல் நிலைய எழுத்தர் தான் எழுதினார். அதில் தான் நாங்கள் கையெழுத்து போட்டோம். காவல் நிலையத்தில் வைத்தும் விசாரித்து என்னிடம், கிராம உதவியாளர் மோகன் தாசிடமும்

கையெழுத்து பெற்றார்கள். நான் சொல்லியிருக்க கூடிய நேரங்கள் அனைத்தும் குறிப்பிட்டு சொல்ல முடியாது என்று சொன்னால் சரிதான். நான் அடையாளம் காட்டக்கூடிய எதிரிகள் யார் அவர்களது தந்தை பெயர் மற்றும் இருப்பிடம் அவைகள் எல்லாம் இதற்கு முன்பு தெரியாது. அன்று தான் முதன் முதலாக பார்த்தேன். நான் பல வழக்குகளில் பல நீதிமன்றங்களில் சாட்சியம் அளித்திருக்கிறேன் என்று சொன்னால் சரிதான். நான் சொன்ன மாதிரி சொன்ன தேதியில் சொன்ன நேரத்தில் எங்கும் செல்லவில்லை என்றும் நான் எதிரிகள் யாரையும் பார்க்கவில்லை என்றும் அவர்கள் யாரும் என் முன்னிலையில் வாக்குமூலம் கொடுக்கவில்லை என்றும் எங்கள் முன்னிலையில் எந்த பொருட்களையும் எடுத்துக்கொடுக்கவில்லை என்றும் நான் கையெழுத்து போட்ட ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து பின்னிட்டு ஆய்வாளர் கேட்டுக்கொண்டதற்கிணங்க கையெழுத்து போட்டேன் என்று சொன்னால் சரியல்ல. நான் உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

Crl. Misc. 39

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF ADDITIONAL DISTRICT COURT, RAMANATHAPURAM**

| | | | | |
|---|---|---|---|---|
| Calendar | .. | .. | } | |
| Miscellaneous | .. | .. | } | |
| Preliminary Register | .. | .. | } | **S.C.** 153/2022 |
| Sessions | .. | .. | } | |
| | | | } | Prosecution – **PW**13 |
| Deposition of witness for | | | } | Defence – |
| | | | } | Court – |

| | | |
|---|---|---|
| Name | : | அல்அமீன் சாதிக் |
| Father/Husband Name | : | நஜிமுதீன் |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 01.02.2023.

(எதிரிகள் 1 முதல் 3 ஆஜர்.)

முதல் விசாரணை–

நான் இராமநாதபுரம் குமரையா கோவில் தெருவில் வசித்து வருகிறேன். நான் இராமநாதபுரம் புதிய பேருந்து நிலையம் அருகில் உள்ள பரக்கத் மஹால் அருகில் மொபைல் கடை வைத்து தொழில் செய்து வருகிறேன். இந்த வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

(இந்த சாட்சியை அரசு தரப்பில் பிறழ்சாட்சியாக மாற்ற அனுமதி கோரப்பட்டது. அனுமதிக்கப்பட்டது)

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை** –

போலிஸ் விசாரணையில் கடந்த 06.03.2021ம் தேதி இராமநாதபுரம் புதிய பேருந்து நிலையம் அருகில் உள்ள எனது கடையில் உள்ள சிசிடிவி கேமரா

பதிவுகளை கேணிக்கரை காவல் ஆய்வாளர் அவர்களிடம் நான் சிடியாக கொடுத்தேன் என்றும் தற்போது எதிரிகளை இவ்வழக்கிலிருந்து காப்பாற்றும் நோக்கத்தில் உண்மையை மறைத்து பொய் சாட்சி சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை – இல்லை.